
# தாய்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

2023 தை - மாசி தாய்-26 சேய்-161



## ஆண்டவரே நான் உம்மை அன்ப கூறுகின்றேன்



வெளியீடு - கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை-40/-


Nixon Miralee
NM
Nixon Miralee
EXPORTER BY
Nixon Miraalle
NM
100% Premium Quality
EXPORT & IMPORT COMPANY
Tuticorin - Tamilnadu - India
Nixon Miralee
The World's Favourite
Maldive Fish

# தாய் THAAI
## எமது எண்ணம்
January - February 2023
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk


**"எது எதுவாக இருப்பினும் ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார் அதுவே எமது நம்பிக்கை எதிர்பார்ப்பு."**

2023ஆம் ஆண்டு பல புதிய எதிர்பார்ப்புக்களோடு இவ்வாண்டிலே காலடி எடுத்து வைத்துள்ளோம். கடவுளுடைய ஆசீர்வாதம் எங்களுக்கு இல்லாமல், எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு இறைவனுடைய ஆசியையும் அன்னை மரியின் பரிந்துரையையும் நாடி நிற்கின்றோம்.

எமது தாய் நாட்டிலே பலவிதமான நிச்சயமற்ற தன்மைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பொருளாதார ரீதியில் மிகவும் நெருக்கடிக்கு உட்பட்டவர்களாய், பணவீக்கம், வாழ்க்கை செலவு, அதிகரிப்பு, கடன் சுமைகள், வேலையில்லா திண்டாட்டம், அரசியல் குழப்பங்கள், வரிச்சுமைகள், மருந்து பற்றாக்குறை, வறுமை, உணவுத் தேவை என்று நாலாப்பக்கத்தாலும் நெருக்குண்டு தத்தளிக்கின்றோம்.

எது எதுவாக இருப்பினும்
ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார்
அதுவே எமது நம்பிக்கை எதிர்பார்ப்பு.

அத்தோடு ஒரு தசாப்பத்திற்கு மேலாக திருஅவையை வழிநடத்திய எமது முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக் கடந்த வருடம் டிசம்பர் 31ஆம் நாள் இறைபதம் அடைந்தார். அவர் திருச்சபைக்கு ஆற்றிய மாபெரும் சேவைக்கான அளப்பரிய அன்போடும் நன்றியோடும் நினைவுகூருவதோடு அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.

**இறை ஆசீருடன்**


## தாய் ஆசிரியர் குழு

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே
☎ : 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
☎ : 0770 090005

**சஞ்சிகைக் குழுத் தலைவர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ
☎ : 0774 985940
✉ : enestons@gmail.com

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திருமதி. சுமதி கோமஸ்
☎ : 0773 672113

**கணனி வடிவமைப்பு**
திருமதி. S. பற்றிக் பெர்னாண்டோ
☎ : 0771 227773

**சஞ்சிகை ஒழுங்கமைப்பு**
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ

**விநியோகம்**
திரு. பீற்றர் சில்வெஸ்டர்
☎ : 0776 010788
✉ : sylvester770@gmail.com

**இணையத்தளம்**
**www.colombostjosephvazmandram.lk**

# காத்திருக்கின்றோம்! வரக்காணோமே!!

கிறிஸ்மஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறது இயேசு பிறந்த நாளைக் கொண்டாட சகல ஆயத்தங்களையும் செய்து காத்துக் கொண்டிருக்கின்றோம். ஏழைக் கோலத்தில், மாட்டுத் தொழுவத்தில் பிறந்த அவரை ஒரு ஓலைக் குடிசையில் துயில் விட்டு நாம் மட்டும் ஆடம்பர உடையணிந்து, பலவகையான உணவருந்தி, பட்டாசு கொழுத்தி கோலாகலமாகக் கொண்டாடுகின்றோமே, இது சரிதானா? முறைதானா?

ஏழையாக பிறந்த இயேசு, தனது தந்தையுடன் சேர்ந்து, அவர் செய்த தச்சுத் தொழிலில் ஈடுபட்டு, ஏழ்மையிலேயே வாழ்ந்தார். ஆடம்பரமாக வாழவில்லை. நம்மையும் ஆடம்பரமாக வாழ அவர் சொல்லவில்லை. கடவுள் நினைத்திருந்தால் தன் குமாரனை ஓர் அரண்மனையிலோ அல்லது மாட மாளிகையிலோ பிறந்திருக்க செய்திருக்கலாம். ஆனால் அதை இறைவன் விரும்பவில்லை. தாவீது கோத்திரத்தில் பிறப்பார் என்று இறைவாக்கினர் உரைத்ததை கருத்தில் கொண்டு, அவர் இராஜ குடும்பத்தில் பிறப்பார் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் எதிர்பாராத விதமாக அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். ஏழையாக வாழ்ந்தார். சிப்பியில் முத்தாக ஒளி வீசினார். மனிதன், அரசன், இறைவன் என்ற மூன்று பதவிகளையும் ஒரே சமயத்தில் வகித்தார். அதற்கு சான்று பகிரவே அவரை சந்திக்க வந்த மூன்று ஞானிகளும் பொன், தூபம், வெள்ளைப் போளம் போன்றவற்றை பரிசாக அளித்தனர்.

அவர் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்த பிறகு, விண்ணுலகிற்கு எழுந்து செல்லுமுன், நான் இப்போது எனது தந்தையிடம் போகிறேன். நான் மீண்டும் வருவேன் என்று உரைத்தார். எனவே அவரது மறு வருகைக்காக நாம் காத்திருக்கிறோம். அவர் இன்னும் வரவில்லையே என்று அங்கலாய்க்கிறோம். அது எல்லோரதும் ஆதங்கம். அவர் வந்துவிட்டார். எம்முடன்தான் இருக்கிறார். நாம் தான் அவரைக் கண்டுக் கொள்வதில்லை என்பது தான் யதார்த்தம்.

இறைவன் உலகத்தை உண்டாக்கி, இறுதியில் மனிதனை உருவாக்கும் பொழுது, அவருடைய சாயலாகவே மனிதனை உருவாக்கினார் என்று தொடக்கநூலில் படிக்கிறோம். ஆக உருவமற்ற இறைவன், மனிதனின் உருவத்தை ஒத்திருக்கிறார் என்று அர்த்தமாகிறது. மழலையின் புன்முறுவலில் இறைவனைக் கண்டேன் என்று ஒரு கவிஞனும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டேன் என்று இன்னொருவனும், நங்கையின் புன்னகையில் இறைவன் சிரிக்கின்றான் என்று மற்றொரு கவிஞனும் பாடி புகழ்ந்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. யாரெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ அவர்களுக்குள் இறைவன் இருக்கிறார். நாம் தான் கண்டு கொள்வதில்லை. நான் ஒரு கிறிஸ்து அவன் என்றால், மற்றவர்கள் என்னில் கிறிஸ்துவைக் காணவேண்டும். எல்லோரையும் சந்தோஷப்படுத்த வேண்டும். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? இல்லாதவர்களோடு உள்ளவர்கள், தங்களிடம் உள்ளவைகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அப்போது அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அந்த மகிழ்ச்சியில் நாம் இயேசுவைக் காணலாம்....



**ஜெயக்குமார் பெர்னாண்டோ**

தொடர்ச்சி 22ம் பக்கம்

**நான் ஒரு கிறிஸ்து அவன் என்றால், மற்றவர்கள் என்னில் கிறிஸ்துவைக் காணவேண்டும். எல்லோரையும் சந்தோஷப்படுத்த வேண்டும். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?**



# புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

அருட்தந்தை அருளானந்தம் உதயதாஸ்

மலர்ந்துள்ள இப்புத்தாண்டு, 2023 உங்கள் அனைவருக்கும் இறை ஆசீரை அள்ளித்தரும் ஆண்டாக அமைவதாக காலமும் நேரமும் கடவுளுடையது. அவரே எம் ஒவ்வொருவருக்கும் உயிர் மூச்சைத் தந்து ஆதரிக்கிறார். 2022ஆம் ஆண்டு கடவுள் எம் வாழ்வில் செய்த பல நன்மைகளை நினைத்து அவரைப் போற்றுவோம். எம்மைப் பக்குவப்படுத்திப் பல நிகழ்வுகளும் நடந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரின்றி, அவருடைய அனுமதியின்றி எம் வாழ்வில் எதுவும் இடம்பெறப் போவதில்லை.

கடந்த ஆண்டு எமது நாடு பாரிய பொருளாதார, அரசியல், சமூக சிக்கலை கண்டது. அது இன்றும் தொடர்கதையாக இருக்கிறது. மக்கள் எழுச்சியின் நிமித்தம் சில மாற்றங்களும் இடம்பெற்றன. சமூக ஆட்சிமுறை மாற்றம் தேவை என்பது எல்லோருடைய பொதுக் கருத்தாக ஒலித்தது. எமது சமூகத்தைச் சற்றுச் சீர்தூக்கிப் பார்க்கும் போது அரசியல் ஆட்சிமுறை மாற்றம் மட்டுமல்லாமல், அதிகார ஆட்சிமுறை மாற்றம் என சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் இம்மாற்றம் தேவைப்படுவதை உணர முடிகிறது. அடுத்தவரில் மாற்றத்தை ஏற்படுத்த முதல் என்னில் மாற்றத்தைக் கொண்டுவர முடியுமா என எண்ணிப் பார்ப்பது சாலச் சிறந்தது.

குடும்ப வாழ்வில் சிக்கல், கணவன் - மனைவி உறவில் விரிசல், பிள்ளைகளின் நிறைவளர்ச்சியில் மந்த நிலை, மன உளைச்சல் என்றெல்லாம் பார்க்கும்போது வெறுமனே வெளியே இருக்கும் முறைமை மட்டுமே மாறவேண்டும் என நாம் நினைத்தால் நாம் ஏமாளிகளாகி விடுவோம். குடும்பமே சமூதாயத்தின் ஆணிவேர். பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்தே ஒரு சமூகம் மலர்கிறது. எனவே எமது குடும்ப வாழ்வும் - உறவும் பலப்பட வேண்டும். பொருளாதார சிக்கலில் உழன்று கூழோ, கஞ்சியோ குடித்தாலும், கந்தையைத் தான் உடுத்தினாலும் குடும்ப நிம்மதியை நாம் இழந்துவிடக் கூடாது, நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பது சான்றோர் வாக்கு, அதற்கொப்ப எமது குடும்பங்களில் முதியவர்களுக்கு, இளம் பிள்ளைகளுக்கு, புதிய உயிர்களுக்கு இடமளிப்போம்.

இப்புத்தாண்டில் எமது குடும்பங்களை செபத்திலும், ஆன்மீக வாழ்விலும் பலப்படுத்த திடசங்கற்பம் பூணுவோம் என பிரதிக்கனையுடன் வாழ முயலுவோம்.

“தாய்” கத்தோலிக்க இதழின் அனைத்து வாசகர்களுக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். இறை ஆசீர் உங்களுக்கு உரித்தாகுக.

## 2023 ஆண்டு

நம் இறைவனின் நல் ஆசீரினாலும் அருளினாலும் தொடங்கியிருக்கும் இப்புதிய ஆண்டில் கடந்த நாட்களில் நாம் கடந்து வந்த சகல குறைகளும் கிறிஸ்து இயேசுவிற்குள் நிறைவாக மாறிட வேண்டி விசுவசித்து இறைவனுக்கு நன்றி கூறிடுவோம்.

“வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்.” பாவத்தின் இருளினை அகற்றி உண்மை என்னும் ஒளிக்குள் நம்மை சேர்த்தருள வேண்டி, நம்மைப் படைத்த இறைவன் நம்மிலே நம்மோடு இணைந்தார். “காரிருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்” அந்த ஒளி இன்றும் துளிர்விட்டு எரிந்து கொண்டே இருக்கின்றது. “யாவே” என்ற கண்ணுக்குப் புலப்படாத இறைவன் கண்முன்னே தோன்றிய இயேசுக்கிறிஸ்துவாக வார்த்தை வடிவத்தில் அன்றாடம் நம்மோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். அவர் என்றுமே நம்மை விட்டு விலகவும் மாட்டார். என்றுமே நம்மை கைவிடவும் மாட்டார். இந்த ஆண்டிலே நமது எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் இறைவனின் திருவருளால் நிறைவேறவும் நம் அனைவரின் இல்லத்திலும் உள்ளத்திலும் அன்பும் அமைதியும் நிறைந்து பெருகி அனைவரோடும் அதனை பகிர்ந்து வாழ்ந்திடவும் இறையருள் வேண்டி நிற்போம்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

# இலங்கையின் புனிதர்

## புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழா - 2023




கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றமானது தனது பாதுகாவலரான புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாவை கொள்ளுப்பிட்டிய புனித அந்தோனியார் ஆலயத்தில் 15.01.2023 அன்று மாலை 4.30 மணிக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதனைத் தொடர்ந்து மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

### கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் ஏற்பாடு செய்யும்

# கொழும்பு பெரிய சிலுவைப்பாதை

**26.02.2023**

**பி.ப. 2.15மணிக்கு**

ஆரம்பம்.

புனித வியாகுல அன்னை ஆலயம், புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13




**செல்லும் பாதைகள்:**

புதுச்செட்டித்தெரு, ஜெம்பட்டா வீதி, புனித அந்தோனியார் ஆலயம் வழியாக புனித அந்தோனியார் மாவத்தை, அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம், செக்கடித்தெரு, ஆண்டிவால் தெரு, கன்னாரத்தெரு, ஜிந்துப்பிட்டிய வீதி, வென்ரோயன் வீதி, சங்கமித்த மாவத்தை வழியாக மீண்டும் ஜெம்பட்டா வீதி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை வீதி, பொஞ்சியன் வீதி வழியாக புனித லூசியாள் பேராலயத்தை வந்தடையும்.

**முடிவு:**

சிலுவைப்பாதை இறுதியில் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.

**அனைவரையும் இத்தவக்கால தியான முயற்சிக்கு அழைக்கின்றோம்.**

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)

## திருப்பலியின் மேன்மை

### 1. திருப்பலியின் மேன்மை

நாம் ஏற்கெனவே அறிந்துள்ளது போல திருப்பலி, அருள்சாதனங்கள் மற்றும் திருப்புகழ்மாலை ஆகியவற்றின் தொகுப்பே “திருவழிபாடு”. இதில் மிக முக்கியமானது, இறைமக்கள் இறைமகன் இயேசுவோடு இணைந்து தந்தையாகிய இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கும், திருப்பலி ஆகும்.



### 1.1. இது திருவழிபாட்டின் மையம்

இந்தத் திருப்பலியே திருவழிபாட்டின் மையமாகவும், நடுநிலையாகவும் உள்ளது. மேலும் இது அனைத்துலகத் திருச்சபைக்கும், தலத் திருச்சபைக்கும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வாழ்வின் மையமாக உள்ளது. ஏனெனில், அதில்தான் கிறிஸ்து இறைவன் உலகை மீட்கும் செயலின் சிகரம் அமைந்துள்ளது. அதில்தான் இறைமகன் கிறிஸ்து வழியாக விண்ணகத் தந்தையை வழிபடும் இறைமக்களுடைய அஞ்சலியின் சிகரமும் அமைந்துள்ளது. அதில்தான் மீட்பின் மறைநிகழ்ச்சிகள் எல்லாம் ஓராண்டுக் கால வட்டத்தில் நினைவுகூரப்படுகின்றன. மீண்டும் உடனிருக்கச் செய்யப்படுகின்றன. மீண்டும் கொண்டாடப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளும் அதனுடன் இணைந்து இருக்கின்றன. அதிலிருந்தே தோன்றுகின்றன. அதையே தம் குறிக்கோளாகக் கொண்டு, அதனிடமே வந்தடைகின்றன. அதனால்தான்,

- திருப்பலியில் திருமுழுக்கு
- திருப்பலியில் உறுதிப்பூசுதல்
- திருப்பலியில் முதல் நற்கருணை (புதுநன்மை)
- திருப்பலியில் ஒப்புரவு (வார்த்தை வழிபாட்டில் மறையுரைக்குப் பிறகு)
- திருப்பலியில் நோயில்பூசுதல் மற்றும் நோயாளிகளை மந்திரித்தல்
- திருப்பலியில் குருப்பட்டம்
- திருப்பலியில் துறவற வார்த்தைப்பாடு
- திருப்பலியில் திருமணம்
- திருப்பலியில் அடக்கச் சடங்குகள் ஆகிய அனைத்தும் கொண்டாடப்படுகின்றன.

தொடக்கத் திருச்சபையில் கிறிஸ்தவ மக்கள் இதை எவ்வளவு முக்கியமானதாகக் கருதினர் என்றால், “அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்து இருந்தார்கள்” (தி.ப 2:42). இவ்வாறு திருநூலும் திருவழிபாட்டுப் பாரம்பரியமும் திருப்பலிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன.

### 1.2 இது மிகச் சிறந்த பலி

திருப்பலி எனப்படும் இயேசுவின் இந்தக் கல்வாரிப் பலி ஆபேலின் பலியை விட, ஆபிரகாமின் பலியை விட, மெல்கிசதேக்கின் பலியை விட, மிகச் சிறந்ததாகவும், உயர்ந்ததாகவும் திகழ்கின்றது. இது புதிய உடன்படிக்கையின் ஒரே நிலையான பலி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் வழியாகவே நமக்கு முடிவில்லா வாழ்வு உறுதியாகிறது. ஏனெனில் நிலைவாழ்வு அளிக்கும் இயேசுவின் உடலும் இரத்தமும் நமக்குத் திருப்பலி வழியாகத் தான் கிடைக்கின்றன.

### 1.3. இது மிகச் சிறந்த செபம்

மேலும் திருப்பலி என்பது ஒரு மிகச் சிறந்த செபம், இதை விடச் சிறந்த செபம் எதுவுமே கிடையாது. பல வேளைகளில் நாம் தனியாகவோ, குழுவாகவோ செபிக்கலாம், மணிக் கணக்காகச் செபிக்கலாம். நற்கருணை பேழையின் முன் ஆராதனை செய்யலாம், சிலுவைப் பாதை, செபமாலை, திருப்பயணங்கள், திருத்தல நடைப்பயணங்கள், தூய ஆவி அல்லது அருங்கொடை செபக்கூட்டங்களில் பங்கெடுத்தல் போன்ற பக்தி முயற்சிகளைச் செய்யலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட திருப்பலியே மிகச் சிறந்தது. ஏனெனில் இவை அனைத்தும் திருப்பலிக்கு ஈடு, இணை ஆகாது. காரணம், இவை பக்தி முயற்சிகள் மட்டுமே, திருவழிபாட்டுச் செயல்கள் அல்ல, மாறாக, திருப்பலி என்பதோ திருச்சபையின் அதிகாரப்பூர்வமான, முறைப்படுத்தப்பட்ட திருவழிபாட்டுச் செயல், இதில் கிறிஸ்துவே தலைமை தாங்குகிறார், செயல்படுகிறார், அருள் பொழிகின்றார். ஆகவே திருப்பலிதான் மிகச் சிறந்த, மிக உயர்ந்த செபம் என்பதை நாம் உணரவேண்டும்.



### 1.4 இது விண்ணக வழிபாட்டின் முன்சுவை.

மேலும் மண்ணக வழிபாடு எனப்படும் இது, விண்ணக வழிபாட்டின் முன் சுவையாகும். இது மீட்புத் திட்டம் அனைத்தையும் தன்னுள் கொண்ட ஒரு மிகச் சிறந்த அருள்சாதனம். இதை நாம் தொடர்ந்து நிகழ்த்த வேண்டும் என்று விரும்பிய இயேசு, “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று கட்டளையிட்டார்.

### 1.5 இது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை

இதையெல்லாம்..

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஆண்டவருடைய காலத்தில் நீதி தழைத்தோங்கும்.

# தமது பணியில் 25ஆண்டுகளைக் கடக்கும் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்



கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் தமிழ் கத்தோலிக்கர் மத்தியில் ஆன்மீக சமூகப் பணியாற்றி வரும் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றமானது தனது வெள்ளிவிழா ஆண்டை கடக்கும் இத்தருணத்தில் தமது மன்ற உறுப்பினர்களுக்கு தமது பணிக்கான கௌரவிப்பினை வழங்கும் முகமாக நத்தார் ஒன்றுகூடல் மற்றும் விருது வழங்கும் நிகழ்வானது 10.12.2022 அன்று மாலை 6.30மணிக்கு செக்கடித்தெரு, அன்னை வேளாங்கண்ணி நடுநிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

அன்று மன்ற ஆன்மீக இயக்குனரும் நிறுவுனருமான அருட்பணி ஆனந்தன் பெர்ணான்டோ-புள்ளே மற்றும் அருட்பணியாளர்கள் அருட்சகோதரிகள் உட்பட நலன்விரும்பிகள், நன்கொடையாளர்களும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் வெள்ளிவிழா நினைவாக நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. உறுப்பினர்களுக்கு அவர்களின் சேவைக்காலத்தை குறிப்பிட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு மாலை 6.30 மணிக்கு ஆரம்ப இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. மன்றத்தின் தலைவர் திரு. வினோலிசன் பெர்ணான்டோ அவர்கள் வரவேற்புரை

**- நோபட்**

ஆற்றினார். துணை ஆயர் அவர்கள் ஆசியுரை வழங்கியதோடு மன்ற உறுப்பினர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். மன்ற ஆன்மீக இயக்குனரும் நிறுவுனருமான அருட்பணி ஆனந்தன் பெர்ணான்டோபுள்ளே மன்ற உறுப்பினர்களுக்கு தமது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்ததோடு நலன்விரும்பிகள் நன்கொடையாளர்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்கள். தொடர்ந்து மன்ற பெண் உறுப்பினர்கள் கரோல் கீதங்கள் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர். சிறுவர்களின் கரோல் நிகழ்ச்சியும், கரோல் கீதத்தோடு இணைக்கப்பட்டிருந்தது சிறப்பாக அமைந்தது. சிறுவர்களுக்கான விசேட நிகழ்ச்சிகள் மன்றத்தின் கீழ்மாடியில் வேறாக நடைபெற்றது.

விசேட நிகழ்வாக நீண்ட காலத்தின் பின் மன்றத்தின் உயர்மட்ட விருதான சேவைச்சுடர் விருதானது மன்ற உறுப்பினர்கள் இருவருக்கு அவர்களது உயர் சேவையை கருத்திற்கொண்டு வழங்கப்பட்டது. அவர்கள் திரு. எனஸ்டன் பெர்ணான்டோ மற்றும் திரு. செ. ஞானப்பிரகாசம் ஆகியோர் ஆவார். அனைவரும் இரவு உணவில் பங்குகொண்டதோடு, மன்றத்தின் செயலக பிரிவு தலைவர் திரு. எனஸ்டன் நன்றியுரை வழங்கினார்.

## கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் வழங்கும்



# சேவைசுடர் விருது

10.12.2022 அன்று நடைபெற்ற கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் நத்தார் ஒன்றுகூடல் மற்றும் விருது வழங்கும் வைபவமானது செக்கடித்தெரு, அன்னை வேளாங்கண்ணி நடுநிலையத்தில், கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. கலாநிதி என்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெற்றபோது மன்றத்தின் மிக உயர்மட்ட விருதாக வழங்கப்படும் சேவைச்சுடர் விருதானது மன்ற உறுப்பினர்களான திருவாளர். எனஸ்டன் பெர்ணான்டோ மற்றும் திருவாளர். செ. ஞானப்பிரகாசம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இவ்விருதானது உறுப்பினர்களின் பணிக்காலம் அவர்களது மற்றத்திற்கான அர்ப்பணிப்பு, அவர்கள் வகித்த பதவிகள், அவர்களது சேவை போன்றவற்றை கருத்திற்கொண்டு ஆன்மீக முதன்மை இயக்குனரினால் தெரிவுசெய்யப்படுகின்றவர்களுக்கு அன்றைய தினமே அறிவிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற விசேட விருதாகும். இவ்விருதானது கடந்த காலங்களில் நான்கு பேர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததோடு நீண்ட காலத்தின் பின் அன்றைய தினம் இருவருக்கு வழங்கப்பட்டது.

## திரு. எனஸ்டன் பெர்ணான்டோ



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவார். மன்றத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை முழு அர்ப்பணிப்புடன் மன்றத்தின் பணிகளில் ஈடுபடுகின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் புதுச்செட்டித்தெரு பங்கை சேர்ந்தவர். பாடற்குழுவில் ஓர்கன் இசைய-மைப்பாளராக நீண்டகாலம் சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது. மறைமாவட்டத்தின் பல இடங்களிலும் முக்கிய நிகழ்வுகளிலும் இவர் தமது பணியில் ஈடுபட்டிருந்தார். மன்றத்தின் முக்கிய பொறுப்புக்களில் விசேட விதமாக பொறுப்பாளார், செயலாளர் மட்டுமல்லாது மன்றத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். மற்றும் ஏனைய குழுக்களின் பொறுப்பாளராகவும் தாய் ஆசிரியர் குழுவிலும், தாய் சஞ்சிகை குழு ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வந்துள்ளார். சிறந்த செயலாளர் என மன்றத்தில் அடையாளப்படுத்தப்பட்டவர் இவர். ஆன்மீக தந்தையர்க்கு கீழ்ப்படிவோடும், மன்ற உறுப்பி-னருடன் இணைந்தும் இவர் பணியாற்றி தமது முழு பங்களிப்பையும் வழங்கியதன் காரணத்தால் இவர்க்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## திரு. செ. ஞானப்பிரகாசம்



இவரும் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் நீண்ட கால உறுப்பினராவார். இவர் கொழும்பு பொரள்ள பங்கைச் சேர்ந்தவர் என்பதோடு, இவர் அப்பங்கில் இயங்கும் கார்மேல் மாதா சபையின் முக்கிய அங்கத்தவர்களுள் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்பங்கில் தமிழ் மக்களுக்காக முன்னின்று உழைப்பவர்களில் இவரும் முக்கிய நபராவார். மன்றத்தின் முக்கிய பொறுப்புக்களில் விசேட விதமாக பொறுப்பாளார், செயலாளர் மட்டுமல்லாது மன்றத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். அத்தோடு இவர் மன்றத்தின் முக்கிய குழுக்களின் பொறுப்பாளராகவும் இருந்து வந்துள்ளார். மன்றத்தின் முக்கிய பணியான கல்விப்பணிக்குழுவின் பொறுப்பாளராக இருந்து வறிய மாணவர்களின் கல்விக்காக முன்னின்று உழைத்தவர். சிறந்த கணக்காளராக அடையாளப்படுத்தப்பட்டவர்.

**இவ்விருவரின் பணி மென்மேலும் சிறந்து விளங்கவும், மன்றத்திற்காக அவர்கள் தொடர்ந்தும் தமது அர்ப்பணிப்பையும் நேரத்தையும் வழங்கவும் மன்றம் வாழ்த்தி நிற்கின்றது.**

# 25ஆண்டு வெள்ளி விழாக் காணும்
# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்



அழிவின் குழியிலிருந்து ஆண்டவரே, என் உயிரைக் காத்தீர்.









கடந்த 25 ஆண்டு காலமாக, கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பணியாற்றி வரும் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின், நத்தார் ஒன்றுகூடல் மற்றும் விருது வழங்கல் நிகழ்வில், கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர், மேதகு கலாநிதி என்டன் ரஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டதோடு மன்ற உறுப்பினர்களுக்கு வெள்ளிவிழா நினைவுச் சிங்கங்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். 10.12.2022

# புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாவும் பொங்கலும்



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம், தமது பாதுகாவலராம் புனித ஜோசப்வாஸ் அடிகளாரின் திருவிழாவை, 15. 1. 2023 பொங்கல் திருவிழா அன்று, கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் கொண்டாடியது. திருவிழா திருப்பலியானது மன்றத்தின் ஆன்மீக இயக்குனரும், நிறுவுனருமான அருட்பணி ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே அடிகளார், மற்றுமொரு ஆன்மீக இயக்குனர் அருட்பணி ஒனாசியஸ் பெர்னாண்டோ அடிகளார் ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது

























# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கானது

## கத்தோலிக்க திருமறை புதிய பாடத்திட்டம் - பகுதி 2

### வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1. கத்தோலிக்க மடல்கள் என அழைக்கப்படும் நூல்கள் 2 தருக.

2. தூய யோசேவ்வாஸ் செய்த புதுமைகள் 2 எழுதுக.

3. லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட இடத்தையும், இந்நற்செய்திக்கு வழங்கப்பட்ட அடையாளத்தையும் எழுதுக.

4. திருச்சபையின் பண்புகள் 4 தருக?

5. சமூக வாழ்வின் அருளடையாளங்கள் இரண்டும் எவை?

6. திருமுழுக்கு வார்த்தைப் பாடுகள் 2 எழுதுக?

7. இலங்கையில் உருவாக்கப்பட்ட 12வது மறைமாவட்டம் எது?

8. தூய பவுல் தனது முதலாவது தூதுரைப் பயணத்தை ஆரம்பித்த பின்னர் அவரின் பயணத் தோழர்கள் இருவரும் யார்?

9. கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள் 2 எழுதுக?

10. சுத்த போசனம் அனுசரிக்க வேண்டிய மிக முக்கியமான நாட்கள் இரண்டினை தருக.

02. 1. பழைய ஏற்பாட்டில் வரலாற்று நூல்கள் இரண்டு எழுதுக.

2. ஐந்நூலில் செல்வாக்கு செலுத்தும் பாரம்பரியங்கள் எவை?

3. ஞாயிறு தினத்தை தூய்மையாகவும் அர்த்தமுள்ள வகையிலும் கடைப்பிடிக்கும் வழிகள் 5 தருக.

03. 1. நான்கு நற்செய்திகளின் அடையாளங்களை எழுதுக.

2. லூக்கா நற்செய்தியின் மறுபெயர்கள் 3 எழுதுக?

3. நற்செய்தி நூல்களை வாசிப்பதனால் உமது வாழ்வில் மாற்றத்திற்கு கிடைத்த செய்திகள் 5 எழுதுக.

04. 1. தூய பவுல் தனது முதலாவது தூதுரைப் பயணத்தின் போது சென்ற முக்கிய இடங்கள் 4ஐ இனங்காண்க.

2. தூய பவுலின் இறுதிக்காலத்தில் அவர் எதிர்கொண்ட சவால்கள் (துன்பங்கள்) மூன்றைக் குறிப்பிடுக.

3. தூய பவுலின் வாழ்க்கை முன்மாதிரியைப் பின்பற்றி நீர் உமது பங்கில் ஆற்றக்கூடிய பணிகள் 5 விபரிக்குக.

05. 1. யூதப் பாஸ்காவில் முக்கியத்துவம் பெறும் உணவுகள் யாவை?

2. இயேசு சீடர்களின் கால்களைக் கழுவிய பின் அவர்களுக்கு கூறிய அறிவுரைகள் 3 எழுதுக.

3. இயேசுவின் அறிவுரைகளை உமது வாழ்வில் கடைப்பிடிக்கக்கூடிய விதிமுறைகள் 5ஐ விபரிக்குக.

06. 1. விண்ணரசு தொடர்பான உவமைகள 2 எழுதுக.

2. மத்தேயு நற்செய்தியின் படி முதல் 3 பேறுகளையும் எழுதுக.

3. விதைப்பவன் உவமையின் மூலம் உமது வாழ்வுக்கு நீர் பெற்றுக் கொள்ளும் செய்திகள் 5 எழுதுக.

07. 1. ஐந்நூலுக்கு கொடுக்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?

2. ஐந்நூல் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த பாரம்பரியங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

3. திருவிவிலியத்தில் ஐந்நூலின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

08. எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. மனிதர் படைப்பின் சிகரம்
2. படைப்பின் இரண்டாம் கதையின் படி “சூழலை பாதுகாப்போம்”
3. தூய மரிய கொறற்றி
4. எமது விசுவாச வாழ்வில் தாக்கம் செலுத்தும் தொலைபேசி பாவனை
5. அன்னை தெரேசாவின் இரக்கத்தின் வாழ்க்கை
6. மோசேயின் அழைப்பும் பணியும்
7. துறவற வாழ்வு

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 3ஆம் அதிகாரம்

நாம் கடவுள் மீது கொள்ளும் நாம்பிக்கை என்பது இனம், மொழி, மதத்திற்கு அப்பாற்பட்டது. எப்படியெனில் கடவுள் இவ்வுலகில் மனுவுரு எடுக்க யூத இனத்தை தேர்ந்து கொண்டார். அக்குலத்திலேயே பிறந்தார். ஆனால் அவர்களில் பலர் இயேசுவை மீட்பர் என்று இன்றுவரை ஏற்கவில்லை. அதனால் இறைவனின் மாட்சி பிற இனத்தவர்க்கு வெளிப்படுத்தட்டது. அதனால் இயேசுவின் மீது நம்பிக்கைக் கொண்ட அனைவரையும் நம் தந்தையாம் கடவுள் தமக்கு ஏற்புடையவர்களாக ஏற்றுக்கொள்கிறார். இயேசு ஒரு மனிதனுக்காகவோ அல்லது ஒரு இனத்திற்காகவோ தம் உயிரைக்கொடுத்து மீட்பை அளிக்க வரவில்லை. மாறாக முழு உலகத்தின் பாவங்களை போக்கிடவே தம்மைத்தாமே பலியாக்கினார். எனவே "நான் கிறிஸ்துவை அறிந்து கொண்டேன், அவரைத் தெரிந்து கொண்டேன்" என்று குறிப்பிட்ட குழுக்களோ



சபைகளோ மாத்திரம் பெருமைகொள்ள முடியாது. மாறாக அனைத்து மக்களுக்கும் முன்மாதிரியாக அவரது அன்பை சுமந்தவர்களாக வாழவேண்டும். "கிறிஸ்தவன்" என்ற பெயரின் அடிப்படையில் மாத்திரமன்றி எமது செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் அவரது மாட்சி மிளிர வேண்டும்.இவ்வாறு வாழ்வதால் மாத்திரமே நாம் திருச்சட்டத்தை உலகம் முழுதும் நிலை நாட்டுகின்றோம்.

**தொடரும்.**

– திருமதி. கோமஸ் –

# "தயவுகூர்ந்து", "நன்றி", "வருந்துகிறேன்",



"தயவுகூர்ந்து", "நன்றி", "வருந்துகிறேன்", என்ற சொற்களின் சக்தி எந்த ஒரு நாளையும் சமாதானமின்றி முடிவுக்குக் கொணராதீர்கள் என உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பங்களில் அமைதியும், மகிழ்வும் நீடித்து நிலைக்க உதவும் மூன்று வார்த்தைகளின் அவசியம். ஒவ்வொரு குடும்பத்திலும் பிரச்சனைகள் உள்ளன, அதைத் தொடர்ந்து சண்டை சச்சரவுகளும் இருக்கலாம், ஆனால், எந்த ஒரு நாளையும் சமாதானமின்றி முடிவுக்குக் கொணராதீர்கள் என உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மூன்று சொற்களும் ஒரு குடும்பத்தில் இருந்தால், அந்த குடும்பம் மகிழ்வு நிறைந்ததாக இருக்கும். "தயவுகூர்ந்து", "நன்றி", "வருந்துகிறேன்",

# இரண்டாம் வத்திக்கான் சங்கம்

## – ஓர் பார்வை



**இயேசுவின் அழைப்பிற்குச் செவிமடுத்த சிலர் துறவற நிலையைத் தேர்ந்தெடுத்தது துறவற வாழ்விற்கு அடிப்படையாக அமைந்தது. இயேசுவின் அழைப்பும் நம் பதிலும் தொடர்கின்றன என்பதற்கு இன்றும் உயிரோட்டத்துடன் துலங்கும் துறவறச் சபைகள் சான்றுகளாகும்.**

### 7. துறவற வாழ்வை புதுப்பித்தல் (விதித் தொகுப்பு)

“துறவற வாழ்வைப் புதுப்பித்தல்” என்னும் விதித் தொகுப்பு திருச்சபையில் துறவற வாழ்வு இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளதை விளக்குகிறது. “திருச்சபை” என்னும் கோட்பாட்டு விளக்கத்தில் துறவியர், துறவறநிலை, துறவற வாழ்வு, துறவற அழைப்புப்பற்றிக் கூறியிருப்பினும், திருச்சங்கம் துறவியர் பற்றித் தனி ஏட்டினைத் தந்திருப்பதில் வியப்பில்லை.

கிறிஸ்தவ துறவற வாழ்வைத் தோற்றுவிக்காவிடினும், அவரது அறிவுரைகளை ஏற்ற பலர் அவற்றைத் தம் வாழ்வில் கடைப்பிடிக்கவும், திருத்தூதர்களைப் பின்பற்றவும் முயன்றனர். காலப்போக்கில் இயேசுவின் அழைப்பிற்குச் செவிமடுத்த சிலர் துறவற நிலையைத் தேர்ந்தெடுத்தது துறவற வாழ்விற்கு அடிப்படையாக அமைந்தது. இயேசுவின் அழைப்பும் நம் பதிலும் தொடர்கின்றன என்பதற்கு இன்றும் உயிரோட்டத்துடன் துலங்கும் துறவறச் சபைகள் சான்றுகளாகும். சில சபைகள் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட தேவையை நிறைவேற்றத் தோன்றி, மறைந்ததையும் இவ்வேடு சுட்டிக்காட்டுகிறது.

காலம், இடம், பொருள் என்ற பின்னணிகளில் துறவற வாழ்வைப் புதுப்பித்து அதற்குப் புதுவாழ்வும் புதுமெருகும் அளிக்க வேண்டும் என்னும் திருச்சபையின் விருப்பத்தை இவ்விதித் தொகுப்பு வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுவதேத் துறவற வாழ்வின் அடிப்படை அளவுகோல் என்பதை எல்லாத் துறவறச் சபைகளும் மேல்வரிச்சட்டமாகக் கொள்ள வேண்டும் என்பதையும், தம் சபையை நிறுவியவரின் நோக்கத்தையும் அவர் வகுத்துத் தந்த தனிப்பட்ட திட்டங்களையும், நல்மரபுகளையும், அவரின் மூலமாகப் பெற்ற தனி வரத்தையும், தம் குடும்பச் சொத்தாகப் பற்றுறுதியுடன் ஏற்றுப் போற்ற வேண்டும் என்பதையும் இவ்விதித் தொகுப்பு வலியுறுத்துகிறது.

நன்றி. அருட்பணி. இ. கிளமெண்ட். ச.ச

இன்றைய உலகச் சூழ்நிலைகளைத் துறவிகள் நம்பிக்கை ஒளியில் பகுத்தறிந்து, திருத்தூது ஆர்வத்தால் மக்களுக்குப் பணிபுரிய வேண்டும் எனவும், கிறிஸ்துவின் வாழ்வும் அவரது படிப்பினைகளும், துறவறச் சபைகளை நிறுவியவரின் நோக்கமும் செயல்முறைகளும், சபைகளைப் புதுப்பித்தலுக்கு ஊற்றாக அமைய வேண்டும் எனவும், திருவிவிலியத்தை இன்றைய ஆய்வு முறைப்படிப் படித்து, அதை இறைவேண்டல் சூழலில் தியானிக்க வேண்டும் எனவும், சபை நிறுவியவரின் காலம், இடம் ஆகிய சூழல்களை அறிந்துணர்ந்து அப்பின்னணிகளில் தம் வாழ்வு, படிப்பினைகள், ஒழுங்குமுறைகளைத் தேர்ந்துத் தெளிய வேண்டும் எனவும், இன்றைய மக்கள் வாழும் சூழல்கள், பின்னணிகள், இடங்கள், பணிக்குறிக்கோள்கள் பற்றிய தெளிவுப் பெற வேண்டும் எனவும் இவ்விதித் தொகுப்புக் கூறுகிறது. இயேவின் வாழ்வே துறவற வாழ்விற்கு அடிப்படை எனவும் அன்னை மரியா துறவிகளுக்கும் துறவற வாழ்விற்கும் மாதிரியும் முன்னோடியும் எனவும் இவ்விதித் தொகுப்பு எடுத்துரைக்கின்றது.

**தொடரும்**



மெசியாவின் மீட்பு எளியவர் அனைவர்க்கும் வாக்களிக்கப்படுகிறது.





பொங்கல் விழா அன்று, சிறப்பு திருப்பலியானது முகத்துவாரம், புனித கர்பவதி அன்னை ஆலயத்தில் காலை 8 மணிக்கு அருட்பணி அலெக்ஸ் அடிகளார் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

**செய்தி: ஜெய கணேஷ்**









# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 14

சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்சலிஸ்டா வினோலிசன்

# யோசுவா


மோசே இறந்த பின் இஸ்ராயேல் மக்களை வழிநடத்த இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவரே யோசுவா ஆவார்.



ஆண்டவர் அவரை யோர்தானை கடந்து போகச் சொன்னார். உடன்படிக்கைப் பேழையை தூக்கி சென்ற குருக்களின் காலடி பட்டவுடனே யோர்தான் நதி வெகு தொலைவிற்கு செல்ல வறண்ட தரை நடுவே மக்கட் கூட்டம் ஆற்றை கடந்துச் சென்றனர்.



ஆண்டவர் சொன்னவாறே எரிக்கோ மதில்களைச் சுற்றி, ஏழு குருக்கள் பேழைக்கு முன் எக்காளம் ஊதிச் செல்ல அனைவரும் அவர்கள் ஏழு முறை மதிலைச் சுற்றி வர நகர மதில்கள் இடிந்து விழுந்தன. இவ்வாறு எரிக்கோ நகர் கைப்பற்றப்பட்டது.



ஆண்டவரின் உதவியினாலே யோசுவா பல மன்னர்களோடு போரிட்டு, அவர்களை தோற்கடித்து பல நிலப்பரப்புக்களை கைப்பற்றி, அவற்றை இஸ்ராயேலின் பன்னிரு குலங்களுக்கும் பங்கிட்டு கொடுத்தார்.







யோசுவா இறுதி வரை ஆண்டவர் மேல் வைத்த விசுவாசத்தில் தளராதுவாழ்ந்தார். அதனாலே "நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்" வேற்று தெய்வங்களை நாடிச் செல்லமாட்டோம் என உறுதி பூண்டார்.




தனது நூற்று பத்தாவது வயதில் இறந்தார். அவரது உடல் திம்னத்செரா என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவரது காலம் வரை இஸ்ராயேலர் ஆண்டவருக்கு மட்டுமே பணிந்து அவருக்கே ஊழியம் செய்து வந்தனர்.

**தொடரும்.**



கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.

# குறுக்கெழுத்துப்போட்டி



மேலிருந்து கீழ்

1. இறைவனை இப்படியாகக் கொண்ட வீடு என்னும் குடும்பம் என்றும் அசைவுறாது

2: இந்த வேறுபாடு நாம்மிடையே இருக்கக்கூடாது. (தலைகீழ்)

4: திருஅவையின் இது கிறிஸ்துவே. (தலைகீழ்)

4: நீரிலும் நிலத்திலும் வாழும் ஆபத்தான உயிரினம். (தலைகீழ்)

6: நாம் அனைவரும் இயேசுவின் பாடுகளை சிந்தித்து மனமாற்றம் பெற்றிட விசேடமான காலம்

15: ஆண்டின் ஏழாம் மாதம். (தலைகீழ்)

23: இதனால் நாம் ஒரு முழத்தையும் கூட்டப் போவதில்லை. (தலைகீழ்)

28: ஐம்புலன்களில் ஒன்று. (தலைகீழ்)

இ.வ: 1: இப்பொழுதின் செபத்தினால் இறைவனை கண்டுகொள்ள முடியும்

7: (இ.மா) கானாவூர் திருமண வீட்டில் திராட்சைஇரசமாய் மாறிய தண்ணீர் நிரப்பப்பட்டது.

10: (குழம்பியுள்ளது) “பிழை” என்ற வார்த்தையின் மறு பெயர்.

15: (இ.மா.) தலையில் இருப்பது


23: (இ.மா.) சூரியன் உதிக்கும் நேரம்

28: (குழம்பியுள்ளது) “இடது” - என்பதன் எதிர் பதம்.


31: (இ.மா) இறைவனின் சித்தத்திற்கு நாம் இப்படி தலை வணங்க வேண்டும்.

34: ஒற்றுமையை குறிக்கும் பறவை.

## படைப்பை இணைப்போம் வாருங்கள்...



# சிலுவைகளாக எண்ணாமல் சந்தர்ப்பங்களாக எண்ணுவோம்!



அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள், பிரச்சினைகள், அவதூறுகள் அனைத்தையுமே சிலுவைகளாக எண்ணாமல் நம்மை புடமிட இறைவன் நமக்குத்தரும் சந்தர்ப்பங்களாக எண்ணுவோம். தங்கமானது நெருப்பில் புடமிடப்பட்டபின் பிரகாசிப்பதுபோல் நாமும் பிரகாசிப்போம். தவக்காலம் துன்பத்தை மட்டுமல்ல துன்பத்திற்குப்பின் தோன்றும் வெற்றியையே அதிகமாக வலியுறுத்துகின்றன என்பதை மனதில் வைத்து தவக்காலத்தில் எமது துன்பத்தில் கடவுளின் திட்டத்தைக் கண்டறிந்து எழுந்து பிரகாசிப்போம்.

## 04 காத்திருக்கின்றோம்...

எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும் நிலை மாறி, அனைவரும் சமம் என்ற நிலை வரவேண்டும். அனைவரும் சமத்துவமாக வாழ வேண்டும். மகிழ்ச்சியாக வாழ வேண்டும். அதுதான் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் அதி முக்கிய கொள்கையாக இருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியில் இயேசுவைக் கண்டு கொள்ளலாம். அவரே கூறுகிறார். "என் பொருட்டு நான்கு ஐந்து பேர் கூடி பேசுகிறீர்களோ அங்கே நானிருப்பேன். நம் மத்தியில் உலவுகிறார். நாம் தான் கண்டு கொள்வதில்லை. மேலும் கூறுவார், "நான் நோயுற்றிருந்தேன், ஆடையின்றி இருந்தேன், பசியாயிருந்தேன், நீங்கள் என்னைப் பார்க்க வரவில்லை, எனக்கு ஆடை தரவில்லை, எனக்கு உணவு தரவில்லை" என்றவர் தொடர்ந்து "யாரெல்லாம் நோயுற்றிருந்தார்களோ, ஆடையின்றி இருந்தார்களோ, பசியாய் இருந்தார்களோ அவர்கள் நானே தான்" என்றார். அவ்வாறான வேளையிலும் அவரை நாம் கண்டு கொள்ளவில்லை. திருப்பலியில் நாளும் தன்னைப் பலியாகத் தருகிறாரே, அப்போதும் நாம் அவரை உணர்ந்து கொள்ளவில்லை. அப்ப வடிவில் தன்னையே ஐக்கியமாக்கி திவ்விய சற்பிரசாதத்தில் காட்சி தருகிறாரே, இன்னுமா நம் கண்களுக்குப் புலப்படவில்லை. உணர்வுபூர்வமாக இயேசுவை அறிந்து கொள்வோம். நாம் கொண்டாடும் அனைத்து பண்டிகைகளும் அர்த்தம் உள்ளதாக அமைய வேண்டும். வெறுமனே சடங்கு சம்பிரதாயமாக விளங்கக் கூடாது. எம் பகிர்வில் தான் கிறிஸ்மஸ் விழா முழுமை பெறுகிறது. நாமும் மகிழ்ந்து, மற்றவர்களையும் மகிழ்வித்து அதன் மூலம் இறைவனை மகிமைப்படுத்துவோம்.

# ஏன் நாம் மட்டும் துன்பத்தில் சிக்கி மாளவேண்டும்?

ஓர் அம்மா தனது ஐந்து வயது மகளிடம் மூணும் மூணும் ஆறு. முப்பத்து மூன்றும் முப்பத்து மூன்றும் எவ்வளவு? என்று கேட்டார். அதற்கு அச்சிறுமி அம்மாவிடம், போமா நீ மட்டும் சின்னக் கணக்காப் போட்டுவிட்டு, எனக்குப் பெரிய கணக்கைப் போடச் சொல்லுறீங்க என்றாள்.

கிறிஸ்து பட்ட பாடுகள் பெரியவை. நமது துன்பங்களோ சிறியவை. கிறிஸ்துவோடு இணைந்து நமது சுமைகளைச் சுமக்கும்போது அவை எளிதானவையாக, இனிமையானவையாக மாறிவிடும்.

**துன்பத்தைக் கண்டு நாம் துவண்டு போகக்கூடாது. மண்ணில் விதைக்கப்பட்ட விதை முளைத்துக்கொண்டு வெளியே வருகின்றது. கோழிக்குஞ்சு முட்டையை உடைத்துக்கொண்டு வெளியே வருகின்றது. ஏன் நாம் மட்டும் துன்பத்தில் சிக்கி மாளவேண்டும்? துன்பம் நம்மைப் புடமிட்டு ஒளிரச் செய்ய வேண்டும்.**

## 07 பொருளுள்ள...

உணர்ந்துதான் சமயத் துன்புறுத்தல்களின் காலத்தில் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் தங்களை வதைப்போரிடம், "திருப்பலியின்றி எங்களால் இருக்க முடியாது" என்று கூறினர். இதனால்தான் இன்று, "திருப்பலி மத்தி, மற்றதெல்லாம் அதைச் சுற்றி" என்றும் கூறப்படுகிறது. ஆகவே நற்கருணை வழிபாடு எனப்படும் திருப்பலியில் கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படை

இவ்வாறு கிறிஸ்தவ வாழ்வு திருமுழுக்கில் தொடங்கினாலும், அது நற்கருணையில் மட்டுமே முழுமை பெறுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கமும் கூட, "திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அஃதுடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அஃது ஓர் ஊற்றாகவும் உள்ளது... சிறப்பாக நற்கருணையிலிருந்து அருள் ஓர் ஊற்றிலிருந்து வருவது போல் வழிந்தோடி நம்மை வந்தடைகிறது" (திவ 10) என்று கூறியுள்ளது. மேற்கூறியவற்றிலிருந்து திருப்பலியின் சிறப்பும் மேன்மையும் மாண்பும் சொல்லாமலேயே விளங்கும்.


Studio Vino Clicks
Wedding
Puberty
Birthday
Baptism
Engagement
Anniversary
First Holy Communion
Other Events
Story Book Albums, Magazine Book Albums, Digital Albums
HD Video, Video Audio Editings, Photo Framing.
STUDIO VINO CLICKS
Vinolison Fernando +94 773 725 735
70/28,2/1,Singhapura Flats, Baseline Road.Borella,Colobmbo-08.
+94 760842608
+94 112676081
+94 773 725735
studiovinoclicks@gmail.com / vino0205@gmail.com
Studio Vino Clicks / Vinolison Fernando
Click Your Memories




"மறை வளர ஒன்றிணைவோம்"


இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 31.01.2023 அன்று இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.
Published by: Rev. Fr. Ananda Fernandopulle. www.colombostjosephvazmandram.lk